# <u>பத்மனாபபுரம் நகராட்சி</u>

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் 2018–ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 24–ம் தேதி வெள்ளிக் கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு

## <u>பொருள்கள்</u>

1)நகராட்சிகளில் 01.04.2018 அரையாண்டு முதல் பொது சொத்து வரி சீராய்வு மேற்கொள்ள பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு ( நிதி IV) துறை ,நாள்.19.07.2018 –ன் படி கீழ்க்கண்டுள்ள விபரப்படியாக சொத்து வரி சீராய்வு மேற்கொள்ள உத்திரவிடப்பட்டது.

1. குடியிருப்பு கட்டிடங்கள் – 50 % மிகாமல்
2. வாடகை குடியிருப்பு கட்டிடங்கள் – 100 % மிகாமல்
3. குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் – 100 % மிகாமல்

அரசாணை எண்76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு ( நிதி IV) துறை ,நாள்.30.07.2018–ன் படி மேற்படி வரிசை எண்.2–ல் உள்ள வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு 100 % மிகாமல் வரிவிதிப்பு செய்யப்படவேண்டும் என்பதனை நீக்கறவு செய்து கீழ்கண்டவாறு

1) குடியிருப்பு கட்டிடங்கள் – 50 % மிகாமலும்
2) வாடகை குடியிருப்பு கட்டிடங்கள் – 100 % மிகாமலும்

வரிதிப்பு செய்ய உத்திரவிடப்படுள்ளது.மேற்படி அரசாணைகள் மற்றும் அதனை பின் பற்றி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் சொத்து வரி சீராய்வு மேற்கொள்ள பிறப்பிக்கப்பட்ட சுற்றறிக்கை வழிகாட்டுதல்கள் ந.க.எண்.20555/2018/R1,நாள்.20.08.2018 மன்றத்திற்கும் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும்.

(ந.க.எண்.1375/2018/அ2)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1330</u>**

அங்கீகரிக்கப்பட்டது.

2) இந்நகராட்சி பொது சுகாதாரபிரிவில் இயங்கும் வாகன எண் TN75 B 4577 க்கு 14.08.2018 முதல் 14.08.2019 வரையிலான காலங்களுக்கு பிரிமியம் செலுத்துவதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.17591/– னை காசோலையாக யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிட், நாகர்கோவில், நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் அவசர அவசியம் கருதி தொகையினை செலுத்துவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1410/2017/அ2)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1331</u>**

அங்கீகரிக்கப்பட்டது.

3)இந்நகராட்சி பகுதிகளில் சுற்றித்திரியும் தெருநாய்கள் பொது மக்களுக்கு பெரிதும் அச்சுறுத்தலாகவே உள்ளது. மேலும் இப்பகுதியில் சுற்றித்திரியும் தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்ய கணக்கெடுப்பு நடத்தப்பட்டதில் 257 தெருநாய்கள் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

எனவே அரசாணை (பத்தாண்டு) எண்.29 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு ( பேரூ.2) துறை ,நாள்.22.01.2013 – ன் படி நாய் ஒன்றுக்கு ரூ.700/– என்ற கட்டணத்தில் நாய்கள் பிடித்து கருத்தடைசெய்ய அனுமதித்துள்ளது. அதன் படி தெருநாய்கள் பிடித்து கருத்தடை செய்ய உத்தேச செலவு ரூ.2,00,000/–னை மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.996/2010/அ2)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1332</u>**

அங்கீகரிக்கப்பட்டது.

4)பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட பூங்காவில் பூங்கா மற்றும் அதன் அருகே உள்ளகுப்பைகளை உரமாக்கிடரூ.7.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து மன்ற அனுமதி பெற்று நிர்வாக அனுமதி பெறவும், நிதி வழங்கிடவும் மருந்துக்கோட்டையில் Micro Composting Center அமைக்கும் பணியுடன் சேர்த்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், திருநெல்வேலி அவர்களின் ஆய்வு கூட்டத்தின் போதும் 13.07.2018 அன்று இந்நராட்சிக்கு வருகை புரிந்த போதும் Park Onsite Composting பணியினை இந்நகராட்சி வருவாய்நிதியிலிருந்து மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.மேற்படி பணிக்கு 2018 –2019–ம் ஆண்டு பொதுப்பணித்துறை தரக்கடுப்பபாடு விலை விகிதத்தின்படி திருத்திய மதிப்பீடு ரு.7.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்படு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் மேற்படி பத்மனாபபுரம் பூங்கா பகுதியில் அங்கன் வாடி மையம் செயல்பட்டு வரும் நிலையில் குழந்தைகள் நலன் கருதி அப்பகுதியில் உரம் தயாரிக்கும் தொட்டி அமைக்க பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

மேற்படி பொதமக்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பை கருத்தில் கொண்டு உரம் தயாரிக்கும் தொட்டியின் கட்டுமான பணியை இந்நகராட்சி தக்கலை பேட்டை சந்தையில் செயல் படுத்த நகராட்சி பொறியாளரால் 02.08.2018–ம் தேதியன்று அறிக்கை தரப்படுள்ளது.

எனவே மேற்கண்ட பணியினை தக்கலை பேட்டை சந்தையில் செயல் படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.0455/2018/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1333</u>**

அங்கீகரிக்கப்பட்டது.

5)பத்மனாபபுரம் நகராட்சியில் 14.01.2015—ல் நடைபெற்ற சிப்பம் 1 மற்றும் 2 ஆகிய இரு வேலைகளுக்கு முன் வைப்புத்தொகையாக ரூ.4,00,000/—ஐ இரு வங்கி வரைவோலையாக செலுத்தியிருந்ததை திரும்ப வழங்காதது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் வழக்கு எண். W.P. .(MD)No.8536/2018, நாள்.24.04.2018—ன் படி வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கினை வழக்கறிஞர் திரு. ஆதிமூலபாண்டியன் அவர்களிடம் ஒப்படைத்து வழக்கு நடத்திடவும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.0609/2018/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1334</u>**

அங்கீகரிக்கப்பட்டது.

6)பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2016—2017—ம் ஆண்டின் கீழ் வார்டு எண்—15 இராமன் பரம்பு பிள்ளையார்கோவில் அருகில் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் கவர் சிலாப் அமைத்து பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணிக்கு (மதிப்பீடு ரூ.9,80,000/—) 08.09.02016—ம் தேதி வரப்பெற்ற ஒப்பந்ப்புள்ளிகிளில் திரு. சுந்தர்ராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு இந்நகர்மன்றத்தீர்மாமனம் எண்.1005,நாள்.09.09.2016—ன் படி பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி ரூ.9,80,000/— மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. அதற்கான முதல் மற்றும் பகுதிப்பட்டியல் தயார் செய்யப்பட்டு ஒப்பந்ததாரருக்கு பட்டியல் தொகையாக ரூ.6,60,000/— வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியின் மதிப்பீட்டுத்தொகையில் சேமிப்புத்தொகையாக ரூ.2,36,055/— ஆக உள்ளது.

மேற்படி சேமிப்புத்தொகையில் மேற்கண்ட ஒப்பந்தாரர் திரு. சுந்தர்ராஜ் என்பவர் கொடுத்துள்ள அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். )

**<u>மன்றத் தீர்மானம் எண். 1335</u>**

அங்கீகரிக்கப்பட்டது.

7) இந்நகராட்சி பொது சுகதாரப்பிரிவு வாகனம் எண். TN75 B 9346 வாகனத்திற்கு புதிய மின்கலப்பெட்டி வாங்குவதற்கு 25.07.2048 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளிதொகை (ரூ) |
|---|---|---|
| 1 | ExideAuthorised Sales & service. Thuckalay. | ரூ.8500/— |

| | | |
|---|---|---|
| 2 | JCE Inverter,<br>Mekkamandabam. | ரூ.8800/– |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.2 ஐ விட வ.எண் .1 ல்காணும் ExideAuthorised Sales & service.Thuckalay. நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ExideAuthorised Sales & service.Thuckalay. நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று விநியோக உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1256/2013/அ2)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1336</u>**

அங்கீகரிக்கப்பட்டது.

8)பத்மனாபபுரம் நகராட்சி பொது நிதி 2018–2019–ன் கீழ் பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட தக்கலை பேட்டை சந்தையில் உரம் தயாரிக்கும் தொட்டி கட்டும் கட்டுமான பணியை மேற்கொள்ள ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் செய்வதற்கு 10.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | ஒப்பந்தாரரின் பெயர் | மதிப்பீட்டினை விட | |
|---|---|---|---|
| 1 | சி.ஜெகஸ்லால்,<br>பரைக்கோடு ,தக்கலை. | – | –10.21 சதவீதம் குறைவு |
| 2 | பி.ராபின்சன்,<br>சடையங்கால்விளை,<br>குழிக்கோடு. | –11.72 சதவீதம் அதிகம் | – |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.0455/2018/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1337</u>**

அங்கீகரிக்கப்பட்டது.

9)நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் இணைத்து வரப்பெற்ற தமிழ்நாடு சுற்றுச்சூழல் மற்றும் அலுவலக அரசு ஆணை எண். (M.S) 137, நாள்.09.11.2017–ன் படி The Bioligical Diversity act 2002 and Tamilnadu Bioligical Diversity Rules 2017 –ன் படியும் குழு உறுப்பினர் அய்வு தொடர்பாக கூட்டத்திற்கு ஆறு பேர் நிபந்தனையின் அடிப்படையில் தேர்வு செய்து கீழ் வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மற்றும் நடவடிக்கை எடுக்கவும் மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>பல்லுயிர் குழு உறுப்பினர்கள் பெயர் பட்டியல் விசகம்</u>**

| | |
|---|---|
| 1 | சரஸ்வதி,<br>w/o, ஜெகதீஷ்,பேலஸ் ரோடு, தக்கலை. |
| 2 | பிறீதா, w/o,சுனில் குமார்,பத்மனாபபுரம்,தக்கலை–8903596277 |
| 3 | ஜே.பால்மதி,<br>w/o ,ஜெகன்,சரல் விளை,தக்கலை–9003492906. |
| 4 | சி.முருகன்,No,15/15, அரசு விளை,பேலஸ் ரோடு, தக்கலை–9443239622. |
| 5 | எஸ். விஜயகுமார்,<br>S/o,சுகுமாரன் நாயர், நீகண்ட சுவாமி கோவில் எதிர்புறம், பத்மனாபபுரம்இதக்கலை–9486578055. |
| 6 | சுபாஷ் குமார்,<br>ராமன் பரம்பு , தக்கலை–9442008337. |

**<u>மன்றத் தீர்மானம் எண். 1338</u>**

அங்கீகரிக்கப்பட்டது.

10)பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கட்டிடங்களுக்குரிய சொத்து வரியினை அரசாணை எண்.73, நாள் 19.07.2018. (ம) 76, நாள்.26.07.2018– ன் படி 01.04.2018 முதல் சீராய்வு செய்து சொத்து வரி உயர்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு ஆட்டோ மூலம் ஒலி பெருக்கி விளம்பரம் மேற்கொள்ளவும் , மேற்படி சொத்து வரி சீராய்வு செய்வதற்கான படிவங்கள் அனைத்தும் பிரிண்டிங் எடுப்பதற்கும், டிஜிட்டல் பேனர் அமைப்பதற்கும் மற்றும் இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து சொத்து வரி விதிப்புதாரர்களுக்கு அறிவிப்பு கடிதம் நிர்வாக அவசர அவசியம் கருதி தபால் மூலம் அனுப்புவதற்கும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.5,00,000/– னை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு செய்திடவும் மேலும் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி பெற்று செய்திடவும் வேலை உத்திரவு வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1375/2018/அ2)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1339</u>**

அங்கீகரிக்கப்பட்டது.

11)மத்திய மாநில அரசுகள் இணைந்து மனித கழிவுகளை மனிதனே அகற்றும் பணியாளர்கள் கணக்கெடுப்பு நடத்த கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 3 நகராட்சிகள் மற்றும் 1 ஊராட்சியில் முகாம் நடத்தி தினமலர் நாளிதழில் விளம்பரம் படுத்தியதற்கான மொத்ததொகை ரூ.17688/—ல் இந்நகராட்சிக்குரிய பகுதியில் சுகாதாரமற்ற பணியாளர்கள் கணக்கெடுப்பு முகாம் நடத்த விளம்பரம்படுத்தியதற்கான தொகை ரூ.3172/— வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1499/2018/அ2)

**மன்றத் தீர்மானம் எண். 1340**

அங்கீகரிக்கப்பட்டது.

12)இந்நகராட்சிக்கு சம்மந்தமாக ஒப்பந்ததாரர், பொது மக்கள், பணியாளர்கள் குத்தகைதாரர்கள்/உரிமைதாரர்கள் சென்னை உயர் நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு தொடரும் பட்சத்தில் மேற்படி வழக்கினை எடுத்து நடத்திட வழக்கறிஞர் திரு. பி. ஆதிமூலபாண்டியன் அவர்களை நியமனம் செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண்.1080/2018/இ1)

**மன்றத் தீர்மானம் எண். 1341**

அங்கீகரிக்கப்பட்டது.

13) பத்மனாபபுரம் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்தகாரராக உள்ள திரு. எஸ். ஸ்டாலின் , என்பவர் 2015—2016—ம் ஆண்டில் பொது நிதியின் கீழ் பணி மேற்கொள்ளப்பட்டதற்கு பட்டியல் தொகை வழங்காத காரணத்தால் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் WP(MD)13602/2018,13603/2018,மற்றும் 13604 /2018 ன் படி வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கினை அரசு வழக்கறிஞர் திரு. குணசீலன் முத்தையா அவர்களின் மூலம் நடத்தப்பட்டு வந்த நிலையில் இவ்வழக்கு சம்மந்தமாக வழக்கறிஞர், திரு. பி. ஆதிமூலபாண்டியன் அவர்களின் மூலம் இந்நகராட்சிக்கு சாதகமாக நீதி மன்றத்தில் ஆஜராகி திரு. குணசீலன் முத்தையா அவர்களிடமிருந்து Change of Vakalat பெற்று தாக்கல் செய்து வழக்கினை எடுத்து நடத்தவும் அதற்காக ஆகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதயிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**மன்றத் தீர்மானம் எண். 1342**

அங்கீகரிக்கப்பட்டது.

14)பத்மனாபபுரம் நகராட்சிக்குச் சொந்தமான தக்கலை பழைய பேருந்து நிலையம் அருகில் நகர புல எண். பி8–180–ல் உள்ள 9.750 சென்று இடத்தில் திரு. ஜி.விஷ்வநாத் என்பவர் மதுரை உயர் நீதி மன்றத்தில் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலும் (Caveat) இடைகால தடை உத்திரவு எதுவும் வழங்காமல் இருக்க பத்மனாபபுரம் நகராட்சி சார்பாக ஆஜராகிட வேண்டிய சென்னை உயர் நீதி மன்ற கிளை மதுரைக்கும் திரு. ஆதிமூலபாண்டியன் வழக்கறிஞர் அவர்களையும் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தின் வழக்கறிஞர் திரு. ஹரிஹரன் அவர்களை நியமனம் செய்யவும் அதற்கான கேவிட் மனு தாக்கல் செய்ய ஏற்படும் உத்தேச செலவு தொகை ரூ.30,000/– மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண். 6190/2000/ற்றி.பி.ஐ)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1343</u>**

அங்கீகரிக்கப்பட்டது.

ஒப்பம்/–(கே. சரவணகுமார்)

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,(கூ.பொ)
பத்மனாபபுரம் நகராட்சி.

//உண்மை நகல் //

மேலாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.